සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**42 | T | I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2019 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2019 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2019

කර්ණාටක සංගීතය I, II
கர்நாடக சங்கீதம் I, II
Carnatic Music I, II

**10.12.2019 / 0830 - 1140**

පැය තුනයි
*மூன்று மணித்தியாலங்கள்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## கர்நாடக சங்கீதம் I

**கவனிக்க :**

(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது மிகப் **பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் நீங்கள் தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை ஒத்த இலக்கத்தை கொண்டிருக்கும் வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**

(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** கர்நாடக இசையில் பயன்படுத்தப்படும் பிரதான தாள வாத்தியம்
(1) கடம் (2) மிருதங்கம் (3) முகர்சிங் (4) கஞ்சிரா

**2.** ஹ்ரஸ்வ ஸ்வரங்களின் அட்சரகால எண்ணிக்கை
(1) 01 (2) 02 (3) 03 (4) 04

**3.** பின்வரும் ஸ்வரங்களுள் அனுமந்திர ஸ்தாயியைக் குறிக்கும் ஸ்வரம்
(1) ஸ (2) ஸ̈ (3) ஸ̣ (4) ஸ̤

**4.** பண்டைத் தமிழிசையில் சுத்தமேளம் எனப்படுவது
(1) மாயாமாளவகௌளை (2) தோடி (3) ஹரிகாம்போதி (4) கல்யாணி

**5.** இசை உருப்படிகளுள் விலோம சிட்டைஸ்வரம் அமைந்துள்ள உருப்படி
(1) பதம் (2) இராகமாலிகை (3) வர்ணம் (4) ஜதிஸ்வரம்

**6.** கர்நாடக இசையிலுள்ள மத்யம ஸ்வரத்திற்கு வழங்கப்படும் தமிழிசைப் பெயர்
(1) உழை (2) விளரி (3) இளி (4) தாரம்

**7.** சஞ்சாரம் எனப்படுவது
(1) ஜதிக்கோர்வை (2) சங்கதி (3) ஸ்வரக்கோர்வை (4) நியாசம்

**8.** 'கங்கணம் கட்டுதல்' எனும் மங்கல நிகழ்விற்கு வாசிக்கப்படும் வாத்தியம்
(1) புல்லாங்குழல் (2) தவில் (3) வீணை (4) நாதஸ்வரம்

[பக். 2 ஐப் பார்க்க

9. ஆடவர்ணம் எனப்படுவது,
(1) சௌக்க வர்ணமாகும். (2) இராகமாலிகா வர்ணமாகும்.
(3) தான வர்ணமாகும். (4) தரு வர்ணமாகும்.

10. புல்லாங்குழலில் வாய்வைத்து ஊதும் துளையின் பெயர்
(1) தாரரந்திரம் (2) முகரந்திரம் (3) சீவாளி (4) அணைசு

11. "அபகாரநிந்தை..." எனும் திருப்புகழ் பாடப்படும் தாளம்
(1) ஆதி (2) சதுஸ்ர ரூபகம் (3) திஸ்ர திரிபுடை (4) கண்ட ஜம்பை

12. சியாமாசாஸ்திரிகளின் சொத்து எனப்படும் இராகம்
(1) பைரவி (2) தோடி
(3) ஆனந்தபைரவி (4) மாயாமாளவகௌளை

13. "பண்டுநால்வருக்கு..." எனத்தொடங்கும் தேவாரம் அமைந்துள்ள பண்
(1) கொல்லி (2) நட்டபாடை (3) பழந்தக்கராகம் (4) நட்டராகம்

14. திருவாவடுதுறை இராஜரத்தினம்பிள்ளை அவர்கள் பின்வருவனவற்றுள் எவ்வாத்தியத்தை வாசித்துப் பிரபல்யமடைந்தார்?
(1) புல்லாங்குழல் (2) நாதஸ்வரம் (3) தவில் (4) வயலின்

15. கர்நாடக இசையில் சங்கேதாட்சர முறையினை ஏற்படுத்தியவர்,
(1) வேங்கடமகி ஆவார். (2) ராமாமாத்யர் ஆவார்.
(3) முத்துஸ்வாமி தீட்ஷிதர் ஆவார். (4) புரந்தரதாஸர் ஆவார்.

16. 'திருச்சாழல்' எனும் பதிகம் இடம்பெறும் திருமுறை,
(1) திருத்தாண்டகமாகும். (2) திருவிசைப்பாவாகும்.
(3) திருப்பல்லாண்டாகும். (4) திருவாசகமாகும்.

17. 'நாதரந்திரம்' எனும் பாகம் அமைந்துள்ள வாத்தியம்
(1) வயலின் (2) புல்லாங்குழல் (3) வீணை (4) மிருதங்கம்

18. பின்வரும் சப்த தாள அலங்காரங்களுள் குறில்-நெடில் ஸ்வரங்களைக் கொண்டுள்ள அலங்காரம்
(1) துருவதாள அலங்காரம் (2) அடதாள அலங்காரம்
(3) மட்டியதாள அலங்காரம் (4) ஏகதாள அலங்காரம்

19. பின்வரும் உருப்படிகளுள் இராகமாலிகை **அல்லாதது**
(1) ஸ்ரீ ஸரஸ்வதி (2) பாவயாமி (3) ஆரபிமானம் (4) நித்யகல்யாணி

20. சங்கராபரண இராகத்தின் நிஷாதத்தினை கைசிகி நிஷாதமாக மாற்றினால் தோன்றும் இராகம்
(1) நடபைரவி (2) தோடி (3) ஹரிகாம்போதி (4) கரஹரப்பிரியா

21. நாளிகேர ரஸத்திற்கு ஒப்பிடப்படும் கிருதிகளை இயற்றியவர்,
(1) தியாகராஜர் ஆவார். (2) சியாமாசாஸ்திரிகள் ஆவார்.
(3) புரந்தரதாஸர் ஆவார். (4) முத்துஸ்வாமி தீட்ஷிதர் ஆவார்.

22. பின்வரும் கீர்த்தனைகளுள் பாஷாங்க இராகத்தில் அமைந்த கீர்த்தனை
(1) "பிறவாத வரம் தாரும்..." (2) "நடனமாடினார்..."
(3) "அள்ளியுண்டிடலாம்..." (4) "இனிநமக்கொரு..."

[பக். 3 ஐப் பார்க்க

+94 71 800 8533 / +94 77 088 2228 WWW.PADANAMAPUBLICATION.LK

**23.** பின்வருவனவற்றுள் தியாகராஜரின் "ஸாதிஞ்செனே..." எனத் தொடங்கும் ஆரபி இராகக் கீர்த்தனை
(1) பஞ்சரத்தினக் கீர்த்தனை (2) திவ்யநாமக் கீர்த்தனை
(3) உற்சவசம்பிரதாயக் கீர்த்தனை (4) இசைநாடகக் கீர்த்தனை

**24.** ஆதிகாலத்தில் தமிழிசைக்குப் பக்கவாத்தியங்களாகப் பயன்படுத்தப்பட்ட இசைக்கருவிகள்,
(1) வயலின், மிருதங்கம் என்பனவாகும். (2) யாழ், குழல் என்பனவாகும்.
(3) யாழ், நாதஸ்வரம் என்பனவாகும். (4) வீணை, மிருதங்கம் என்பனவாகும்.

**25.** "இனிநமக்கொரு கவலையுமில்லை" எனும் கீர்த்தனையின் அனுபல்லவி ஆரம்பிக்கும் எடுப்பு
(1) சம எடுப்பு (2) அதீத எடுப்பு (3) ஆகத எடுப்பு (4) அனாகத எடுப்பு

**26.** ஸ்தாயி என்பதற்கு மேலைத்தேய இசையில் வழங்கப்படும் பெயர்
(1) மேஜர் ஸ்கேல் (2) ஒக்டேவ் (3) ஆல்டோ (4) மைனர் ஸ்கேல்

**27.** ஹிந்துஸ்தானி இசையில் பூர்விதாட் என குறிப்பிடப்படும் இராகம்
(1) பந்துவராளி (2) ஹரிகாம்போதி (3) மோகனம் (4) ஆரபி

**28.** திரிகூட இராசப்பக் கவிராயரால் எழுதப்பட்ட இசைநாடகம்,
(1) இராம நாடகமாகும். (2) அசோமுகி நாடகமாகும்.
(3) குற்றாலக் குறவஞ்சியாகும். (4) நந்தனார் சரித்திரமாகும்.

**29.** பின்வருவோருள் அபூர்வ தாளங்களிலும் பல்வேறு நடைகளிலும் பாடல்களை இயற்றியவர்
(1) அருணகிரிநாதர் (2) தியாகராஜர் (3) நாவுக்கரசர் (4) சேந்தனார்

**30.** பிறழ்ச்சிப்பண் என அழைக்கப்படும் இராகம்
(1) ஷாடவ இராகம் (2) பாஷாங்க இராகம்
(3) உபாங்க இராகம் (4) ஜன்னிய இராகம்

**31.** சீதாராம விஜயம் எனும் இசை நாடகத்தை இயற்றிய வாக்கேயகாரர்,
(1) அருணாசலக்கவிராயர் ஆவார். (2) புரந்தரதாஸர் ஆவார்.
(3) மாரிமுத்தாப்பிள்ளை ஆவார். (4) தியாகராஜர் ஆவார்.

**32.** தோஷமுள்ள இராகம் எனப்படுவது
(1) நட்டராகம் (2) தக்கராகம்
(3) விவாதிராகம் (4) பழந்தக்கராகம்

**33.** "......... பன்னிரு கரமும் வேலும் அயிலும்" என நிறைவுறும் வரியினைக் கொண்ட உருப்படி வகை
(1) திருப்புகழ் (2) கீர்த்தனை (3) தேவாரம் (4) திருப்பல்லாண்டு

**34.** "ஸ்ரீ நாதாதி..." எனத் தொடங்கும் கீர்த்தனைப் பாடப்பட்ட சந்தர்ப்பமானது, முத்துஸ்வாமி தீட்ஷிதர் அவர்கள்
(1) திருத்தணி முருகனால் ஆட்கொள்ளப்பட்டபோது பாடப்பட்டது.
(2) வறுமையில் வாடியபோது பாடப்பட்டது.
(3) கோவிலூர் இறைவன் சந்நிதியின் கதவு திறப்பதற்காகப் பாடப்பட்டது.
(4) எட்டயபுரத்தில் வரட்சி நீங்க மழை பொழிவித்தபோது பாடப்பட்டது.

**35.** பின்வருவனவற்றுள் கோபாலகிருஷ்ண பாரதியாரினால் இயற்றப்பட்ட கீர்த்தனைகளில் ஒன்று
(1) "தாமதமேன் சுவாமி..." (2) "கனகசபேசன் சேவடி..."
(3) "உள்ளமிரங்கி..." (4) "ஸ்ரீராஜராஜேஸ்வரி..."

[பக். 4 ஐப் பார்க்க

+94 71 800 8533 / +94 77 088 2228 WWW.PADANAMAPUBLICATION.LK

**36.** உத்க்ருஹம், த்ருவம், மேளபாகம், ஆபோகம் என்னும் அங்கங்களைக் கொண்ட உருப்படி
(1) இலட்சணகீதம் (2) திருப்புகழ் (3) பிரபந்தம் (4) ஸ்வரஜதி

**37.** ஆரபி இராகத்தின் ஆரோஹண - அவரோஹணம்
(1) ஸரிகபதஸ் - ஸ்நிதபமகரிஸ (2) ஸரிகமபதநிஸ் - ஸ்நிதபமகரிஸ
(3) ஸரிமபதஸ் - ஸ்நிதபமகரிஸ (4) ஸமகமபதநிஸ் - ஸ்நிதபமகரிஸ

**38.** கமாபத , நீ தநி பதாநீ, ; ஸ்ா , என்னும் ஸ்வரக் கோர்வையின் மொத்த அட்சரங்கள்
(1) 11 (2) 12 (3) 14 (4) 16

**39.** தியாகராஜ சுவாமிகளினால் இறுதியாகப் பாடப்பட்ட கிருதி
(1) தெரதீயகராதா (2) சியாமசுந்தராங்க (3) பாலகனகமய (4) நம்மிவச்சின

**40.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - பல்லவி, அனுபல்லவி, முக்தாயிஸ்வரம், சரணம் ஆகிய அங்கங்களைக் கொண்டது.
B - எல்லா அங்கங்களுக்கும் சாஹித்தியங்கள் காணப்படும்.
C - தானஜாதி சஞ்சாரங்களுடன் பிரகாசிக்கும்.
D - சௌக்க காலத்தில் அமைந்திருக்கும்.
மேற்கூறியவற்றுள் தானவர்ணம் பற்றிய சரியான கூற்றுகள்
(1) A, C (2) A, D (3) B, C (4) B, D

* *

[பக். 5 ஐப் பார்க்க

+94 71 800 8533 / +94 77 088 2228 WWW.PADANAMAPUBLICATION.LK

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**42 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2019 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2019 டிசெம்பர்
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2019**

කර්ණාටක සංගීතය I, II
**கர்நாடக சங்கீதம் I, II**
Carnatic Music I, II

## கர்நாடக சங்கீதம் II

✳ **முதலாம் வினாவையும் வேறு நான்கு** வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

**1.** பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) ஜன்னிய இராகப் பிரிவுகளின் எண்ணிக்கை யாது?

(ii) ஆதார சுருதி கூடிய நாதஸ்வரம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

(iii) திருத்தாண்டகம் பாட உகந்த இராகம் எது?

(iv) தாளத்தில் ஜாதிபேதமடையும் அங்கம் யாது?

(v) மேஜர் ஸ்கேல் என்பதற்கு ஒப்பான இராகம் எது?

(vi) சிதம்பரம் தேர் நகர்வதற்காகப் பாடப்பட்ட திருமுறை யாது?

(vii) கர்நாடக சங்கீதம்-ஹிந்துஸ்தானி சங்கீதம் எனும் இரு பிரிவுகளை முதன்முதலில் குறிப்பிடும் நூல் எது?

(viii) கடபயாதிச் சக்கரத்தில் பந்துவராளி இராகத்திற்கு வழங்கப்படும் பெயர் யாது?

(ix) பெரியமேளம் எனும் குழுவில் அடங்கும் இசைக்கருவிகள் இரண்டினைத் தருக.

(x) மிருதங்கத்தின் இடந்தலைக்கு சுருதி சேர்க்கப்படும் இரு சுருதிகளும் எவை?

**2.** பின்வரும் இராகங்களுள் விரும்பிய ஓர் இராகத்தின் இலட்சணத்தை விரிவாக எழுதுக.
(உருப்படிகள், சஞ்சாரங்கள் என்பன எழுதப்படல் வேண்டும்.)

(i) கரஹரப்பிரியா

(ii) மத்யமாவதி

(iii) பந்துவராளி

**3.** பின்வருவனவற்றுள் விரும்பிய **இரண்டினைப்** பற்றி விரிவான விளக்கம் தருக.

(i) மூன்றுவகை எடுப்புக்கள்

(ii) ஹிந்துஸ்தானி இசை

(iii) மேலைத்தேய இசை

**4.** (i) வீணையின் படத்தினை வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக.

(ii) வீணையின் அமைப்பினை விளக்குக.

(iii) வீணையின் சிறப்புக்கள் **இரண்டினைத்** தருக.

(iv) வீணை வாசித்துப் பிரபல்யமடைந்த இசைக்கலைஞர்கள் **இருவரினது** பெயர்களைத் தருக.

[பக். 6 ஐப் பார்க்க

+94 71 800 8533 / +94 77 088 2228 WWW.PADANAMAPUBLICATION.LK

5. சியாமா சாஸ்திரிகளின் வாழ்க்கை வரலாற்றினையும் அவர் இசைக்கு ஆற்றிய பணிகளையும் பின்வரும் விடயங்களின் கீழ் ஆராய்க.

(i) பிறந்த இடம்

(ii) இளமைக் காலம்

(iii) வாழ்ந்த காலம்

(iv) இயற்றிய உருப்படிகள் **இரண்டு**

(v) உருப்படிகளின் சிறப்புக்கள் **இரண்டு**

6. (i) 72 மேளகர்த்தா அமைப்பினைச் சுருக்கமாக எழுதுக.

(ii) 7 ஆவது சக்கரத்தினைக் குறிப்பிட்டு, அச்சக்கரத்தில் இடம்பெறும் இராகங்களையும் அதன் மேள எண்களையும் முறையே தருக.

(iii) 7 ஆவது சக்கரத்தில் வரும் இராகங்களின் ஸ்வரஸ்தானங்களைக் கிரமமாக எழுதுக.

7. நீர் பார்த்து இரசித்த வில்லுப்பாட்டு நிகழ்வொன்றினைப் பற்றி விரிவாக எழுதுக.

**அல்லது**

இந்தியாவின் கர்நாடக இசைவரலாற்றில் 18 ஆம் நூற்றாண்டின் கலாசாரப் பின்னணிப் பற்றி ஆராய்க.

***

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහස්‍යයි
அந்தரங்கமானது

# අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2019
# க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2019

| විෂයය අංකය<br>பாட இலக்கம் | 42 | විෂයය<br>பாடம் | கர்நாடக சங்கீதம் |
|---|---|---|---|

## I පත්‍රය - පිළිතුරු
## I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 4 | 21. | 4 | 31. | 4 |
| 02. | 1 | 12. | 3 | 22. | 4 | 32. | 3 |
| 03. | 4 | 13. | 4 | 23. | 1 | 33. | 2 |
| 04. | 3 | 14. | 2 | 24. | 2 | 34. | 1 |
| 05. | 2 | 15. | 1 | 25. | 4 | 35. | 2 |
| 06. | 1 | 16. | 4 | 26. | 2 | 36. | 3 |
| 07. | 3 | 17. | 3 | 27. | 1 | 37. | 3 |
| 08. | 2 | 18. | 2 | 28. | 3 | 38. | 2 |
| 09. | 1 | 19. | 1 | 29. | 1 | 39. | 2 |
| 10. | 2 | 20. | 3 | 30. | 2 | 40. | 1 |

PADANAMA PUBLICATION

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන කීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

| නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව<br>சரியான விடைகளின் தொகை | 25 / 40 | I පත්‍රයේ මුළු ලකුණු<br>பத்திரம் I இன் மொத்தப்புள்ளி | 25 / 40 |
|---|---|---|---|

# கர்நாடக சங்கீதம் II

**வினா இலக்கம் 01 இற்கான குறிக்கோள்**
இராகங்களின் பிரிவுகள், இசைக்கருவிகளின் வேறுபாடுகள், திருமுறைகள், தாள விடயங்கள், மேலைத்தேய இசை, ஹிந்துஸ்தானி இசை, கடபயாதித் திட்டம் போன்றவை பற்றிய அறிவினை வெளிப்படுத்துவர்.

01. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

(i) ஜன்னிய இராகப் பிரிவுகளின் எண்ணிக்கை யாது?
(ii) ஆதார சுருதி கூடிய நாதஸ்வரம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
(iii) திருத்தாண்டகம் பாட உகந்த இராகம் யாது?
(iv) தாளத்தில் ஜாதி பேதமடையும் அங்கம் யாது?
(v) மேஜர் ஸ்கேல் என்பதற்கு ஒப்பான இராகம் எது?
(vi) சிதம்பரம் தேர் நகர்வதற்குப் பாடப்பட்ட திருமுறை யாது?
(vii) கர்நாடக சங்கீதம்-ஹிந்துஸ்தானி சங்கீதம் எனும் இரு பிரிவுகளை முதன்முதலில் குறிப்பிடும் நூல் எது?
(viii) கடபயாதிச் சக்கரத்தில் பந்துவராளி இராகத்திற்கு வழங்கப்படும் பெயர் யாது?
(ix) பெரிய மேளம் எனும் குழுவில் அடங்கும் இசைக்கருவிகள் இரண்டினைத் தருக.
(x) மிருதங்கத்தின் இடந்தலைக்கு சுருதி சேர்க்கப்படும் இரு சுருதிகளும் எவை?

| | | |
|---|---|---|
| (i) | 07 | (01 புள்ளி) |
| (ii) | திமிரி | (01 புள்ளி) |
| (iii) | ஹரிகாம்போதி | (01 புள்ளி) |
| (iv) | லகு | (01 புள்ளி) |
| (v) | சங்கராபரணம் | (01 புள்ளி) |
| (vi) | திருப்பல்லாண்டு | (01 புள்ளி) |
| (vii) | சங்கீத சுதாகரம் | (01 புள்ளி) |
| (viii) | காமவர்த்தனி | (01 புள்ளி) |
| (ix) | தவில், நாதஸ்வரம், ஒத்து, தாளம் (ஏதேனும் இரண்டிற்கு) | (02 புள்ளிகள்) |
| (x) | மந்திரஸ்தாயி பஞ்சமம், மந்திரஸ்தாயி ஸட்ஜம் | (02 புள்ளிகள்) |

மொத்தப் புள்ளிகள் - $1 + 1 + 1 + 1 + 1 + 1 + 1 + 1 + 2 + 2 = 12$ புள்ளிகள்

**வினா 02 இற்கான குறிக்கோள்**
குறித்த இராகத்தின் தாய் இராகம் அல்லது ஜன்னிய இராகம், அதன் ஆரோஹண-அவரோஹணம், ஸ்வரஸ்தானங்கள், அதன் இலட்சணங்கள், சஞ்சாரங்கள், உருப்படிகள், என்பவற்றைக் குறிப்பிடுவர்.

02. பின்வரும் இராகங்களுள் விரும்பிய ஓர் இராகத்தின் இலட்சணத்தை விரிவாக எழுதுக.
(உருப்படிகள், சஞ்சாரங்கள் என்பன எழுதப்படல் வேண்டும்.)
(i) ஹரகரப்பிரியா
(ii) மத்யமாவதி
(iii)பந்துவராளி

விடைகள்:-
i.ஹரகரப்பிரியா

- 22 வது மேளகர்த்தா இராகம் எனக் குறிப்பிட்டிருப்பின் (01 புள்ளி)

- ஆ- ஸரிகமபதநிஸ்
  அ- ஸ்நிதபமகரிஸ
  எனக் குறிப்பிட்டிருப்பின் (02 புள்ளிகள்)

- ஸ்வரஸ்தானங்கள் :
  ஸட்ஜம்
  சதுஸ்ருதி ரிஷபம்
  சாதாரண காந்தாரம்
  சுத்தமத்யமம்
  பஞ்சமம்
  சதுஸ்ருதி தைவதம்
  கைசிகி நிஷாதம்
  எனக் குறிப்பிட்டிருப்பின் (02 புள்ளிகள்)

- பூர்வாங்கமும் உத்தராங்கமும் ஒரே சீராய் அமைந்துள்ள மேள இராகங்களில் இதுவும் ஒன்று எனக் குறிப்பிட்டிருப்பின் (01 புள்ளி)
- பிரத்தியாகத கமகம் இந்த இராகத்தின் சொரூபத்தைத் தெளிவாகப் புலப்படுத்தும். நீதபமகரீ, நீதபதநிஸ், நீதபாமகாரி என்பன ரஞ்சகப் பிரயோகங்கள்.
- எந்நேரமும் பாடலாம்.
- அநேக ஜன்னிய இராகங்களையுடைய ஜனக இராகங்களில் இதுவுமொன்று.
- கிருதிகள் ஸ,ரி,ப,நி ஆகிய ஸ்வரங்களில் ஆரம்பிக்கின்றன.
- திரிஸ்தாயி இராகம், ஹிந்துஸ்தானி சங்கீதத்திலுள்ள காபிதாட் என்பது இந்த இராகமேயாகும்.
- தியாகராஜ சுவாமிகள் இவ் இராகத்தில் அநேக கிருதிகளை இயற்றிப் பிரபல்யமடைய செய்தார்.
- ஸாமகானம் இவ்விராகத்திலேயே பாடப்பட்டது எனக் கூறப்படுகின்றது.
- மூர்ச்சனாகாரக மேள இராகம். இதன் ரி,க,ம,ப,த,நி ஆகிய ஸ்வரங்களை முறையே கிரக பேதம் செய்தால் ஹனுமதோடி,மேசகல்யாணி, ஹரிகாம்போதி, நடபைரவி, தீரசங்கராபரணம் ஆகிய இராகங்கள் வரும்.
- ஸர்வ ஸ்வர கமக வரிக ரக்தி இராகம், ரி,க,த,நி, இராகச் சாயா ஸ்வரங்களும், நியாஸ ஸ்வரங்களுமாகும்

இவற்றுள் எவையேனும் 6 விடயங்கள் குறிப்பிட்டிருப்பின் (03 புள்ளிகள்)

சஞ்சாரம் :-பொருத்தமான ஸ்தாயிக் குறியீடுகள், அங்க அடையாளங்கள் பயன்படுத்தி எழுதியிருப்பின் (01 புள்ளி)

உருப்படிகள்

| | | | |
|---|---|---|---|
| கிருதி | - சக்கனிராஜ | - ஆதி | - தியாகராஜர் |
| கிருதி | - நடசி நடசி | - ஆதி | - தியாகராஜர் |
| கிருதி | - விடமுஸேயே | - ஆதி | - தியாகராஜர் |
| கிருதி | - பக்கல நிலபடி | - மிஸ்ரசாபு | - தியாகராஜர் |
| கிருதி | - ராமநீஸமான | - ரூபகம் | - தியாகராஜர் |
| கிருதி | - ஸங்கல்பபே | - ஆதி | - தியாகராஜர் |
| கிருதி | - தியாகராஜா | - ஆதி | - தியாகராஜர் |
| கிருதி | - மாயவித்தை | - ஆதி | - பாபநாசம் சிவன் |

இவ் இராகத்தில் எவையேனும் 2 உருப்படிகள் கொடுக்கப்பட்டிருப்பின் (02 புள்ளிகள்)

(மொத்தப் புள்ளிகள் $1 + 2 + 2 + 1 + 3 + 1 + 2 = 12$ புள்ளிகள்)

ii.மத்யமாவதி

- 22 வது மேளமாகிய கரஹரப்பிரியாவின் ஜன்னியம் (01 புள்ளி)

- ஆ:- ஸரிமபநிஸ்
  அ:- ஸ்நிபமரிஸ
  
  எனக் கொடுக்கப்பட்டிருப்பின் (02 புள்ளிகள்)

- ஸ்வரஸ்தானங்கள் :-
  ஸட்ஜம்
  சதுஸ்ருதி ரிஷபம்
  சுத்த மத்திமம்
  பஞ்சமம்
  கைசிகிநிஷாதம்
  
  எனக் கொடுக்கப்பட்டிருப்பின் (02 புள்ளிகள்)

- ஜீவஸ்வரம் - ரி,ம,நி
  நியாஸ ஸ்வரம் - ரி,ம,ப,நி
  கம்பித ஸ்வரம் - ரி,நி
  க்ரகஸ்வரம் - ஸ,ரி,ம,ப,நி
  
  எவையேனும் ஒன்று கொடுக்கப்பட்டால் (01 புள்ளி)

- புராதன இராகம்.
  பெரியபுராணம் பாட ஏற்ற இராகம்.
  கச்சேரியின் இறுதியில் பாட உகந்த இராகம்.
  ஔடவ இராகம் - காந்தார தைவதம் விலக்கப்பட்டது.
  மங்களம் பாட உகந்த இராகம்.
  பண்- செந்துருத்தி.
  சுத்த கர்நாடக இராகம்.
  மோகன இராகத்தின் ரிஷப மூர்ச்சனையே மத்யமாவதி ஆகும்.
  தோஷ நிவர்த்தி இராகம். (03 புள்ளிகள்)

சஞ்சாரம்:- காந்தார தைவதம் விலக்கப்பட்ட சஞ்சாரம் எழுதியிருப்பின் -01 புள்ளி

உருப்படிகள் கீதம்- சிவபெருமானே - ஆதி
வர்ணம் -முருகா - ஆதி
க்ருதி - ஸரனுஸரனுசு - ஆதி

(ஏதாவது உருப்படிகள் 2 எழுதியிருப்பின் 02 புள்ளிகள்)

(மொத்தப் புள்ளிகள் $1 + 2 + 2 + 1 + 3 + 1 + 2 = 12$ புள்ளிகள்)

iii.பந்துவராளி

- இது 51 ஆவது மேளகர்த்தா இரகம். பிரஹ்ம சக்கரத்தில் 3 ஆவது இராகம் (பிரஹ்ம- கோ) எனக்குறிப்பிட்டிருப்பின் (01 புள்ளி)

  ஆ:-ஸரிகமபதநிஸ்
  அ:-ஸ்நிதபமகரிஸ (02 புள்ளிகள்)
- ஸ்வரஸ்தானங்கள் :
  ஸட்ஜம்
  சுத்தரிஷபம்
  அந்தர காந்தாரம்
  பிரதி மத்யமம்
  பஞ்சமம்
  சுத்த தைவதம்
  காகலி நிஷாதம்
  எனக் குறிப்பிட்டிருப்பின் (02 புள்ளிகள்)
- சம்பூர்ண ராகம், ஆரோஹண- அவரோஹணங்களில் எல்லா ஸ்வரங்களும் இராகச் சாயா ஸ்வரங்களாகவும் நியாச ஸ்வரங்களாகவும் வரும்
- மத்யமத்தை சற்று தீர்க்கமாக அசைத்தும் பாடலாம் பஞ்சமத்தில் நின்று சஞ்சாரம் செய்யலாம்
- உருப்படிகள் ஸ,ப,நி ஸ்வரங்களில் ஆரம்பிக்கின்றன.

  இவற்றுள் 2 விடயங்களைக் குறிப்பிட்டிருப்பின் (01 புள்ளி)

- பதமா ,தஸ்நிதபம என்பன விசேஷ சஞ்சாரங்கள்
- ஸர்வ ஸ்வரக மக வரிக ரக்தி இராகம்.
- தாரஸ்தாயி காந்தாரத்திற்கு மேல் சஞ்சாரம் காண்பது அரிது.
- பிரசித்தமான பிரதிமத்யம இராகங்களில் இதுவும் ஒன்று. விஸ்தாரமான ஆலபனைக்கு இடம் கொடுக்கும் இராகம்.
- இது மாயாமாளவ கௌளையின் நேர் பிரதி மத்யம இராகம்
- சாயாலக இராகங்களில் ஒன்று.
- மூர்ச்சனாகாரக இராகம். இதன் நிஷாத மூர்ச்சனையே கனகாங்கி (1) மேளகர்த்தாவாகும்.
- எப்பொழுதும் பாடலாம்
- பண்-சாதாரி, நட்டராகம் என்பது இவ் இராகமேயாகும்.
- ஹிந்துஸ்தானி இசையில் "பூர்விதாட்" என்று அழைக்கப்படும்.
- கருணைச்சுவையை வெளிப்படுத்தும் இராகம்.
- கடபயாதி சங்க்யைக்காக "காமவர்த்தனி" என்று அழைக்கப்படுகிறது.
- இவ்இராகக் கிருதிகளைப் பாடக் கச்சேரிகளை கட்டும்.

  இவற்றுள் எவையேனும் 6 விடயங்கள் குறிப்பிட்டிருப்பின் (03 புள்ளிகள்)

சஞ்சாரம் :- பொருத்தமான ஸ்தாயிக் குறியீடுகள், அங்க அடையாளங்கள் பயன்படுத்தி எழுதியிருப்பின்
(01 புள்ளி)

உருப்படிகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1) வர்ணம் | - சாமிநின்னே | - | ஆதி | - | ஷட்காலநரசய்யா |
| 2) கிருதி | - ஸாரஸாக்ஷி | - | ஆதி | - | ஸ்வாதித்திருநாள் |
| 3) கிருதி | - சம்போ மஹாதேவ | - | ரூபகம் | - | தியாகராஜர் |
| 4) கிருதி | - நின்னருள் இயம்பலாகுமோ | - | ரூபகம் | - | பாபநாசம் சிவன் |
| 5) கிருதி | - சிவசிவ சிவயென | - | ஆதி | - | தியாகாராஜர் |
| 6) கிருதி | - நின்னே நெர | - | ரூபகம் | - | தியாகாராஜர் |

இவற்றுள் எவையேனும் 2 உருப்படிகள் கொடுக்கப்பட்டிருப்பின் (02 புள்ளிகள்)

(மொத்தப் புள்ளிகள் $1 + 2 + 2 + 1 + 3 + 1 + 2 = 12$ புள்ளிகள்)

**வினா இலக்கம் 03 இற்கான குறிக்கோள்**
தாளத்தின் உட்பிரிவுகள், ஹிந்துஸ்தானி- மேலைத்தேய இசைகளுக்கு இடையிலான ஒற்றுமை - வேற்றுமைகள், அவற்றின் தனித்துவ இயல்புகள், ஆற்றுகை முறைகள், தனித்துவமான இசைக் கருவிகள் போன்றவை தொடர்பாக விரிவான விளக்கத்தினை அளிப்பர்.

03. பின்வருவனவற்றுள் விரும்பிய இரண்டினைப் பற்றி விரிவான விளக்கம் தருக.
(i) மூன்று வகை எடுப்புக்கள்
(ii) ஹிந்துஸ்தானி இசை
(iii) மேலைத்தேய இசை

(i) எடுப்புக்கள் (க்ரஹம்)

தாளத்தில் (எடுப்பு) பாட்டு எந்த இடத்தில் ஆரம்பிக்கிறதோ அந்த இடத்திற்கு க்ரஹம் அல்லது எடுப்பு என்று பெயர்.

எடுப்பு மூன்று வகைப்படும்.


1. சம எடுப்பு (ஸம க்ரஹம்)
2. அனாகத எடுப்பு(அனாகத க்ரஹம்)
3. அதீத எடுப்பு (அதீத க்ரஹம்)

சம எடுப்பு :

தாளமும் பாட்டும் ஒரே சமயத்தில் ஆரம்பித்தல் சம எடுப்பு எனப்படும்

உ+ம் :- மயில்வாகனா - மோகனம் - ஆதி

ஆடும் கலாபமயில்- கல்யாணி - ஆதி




அனாகத எடுப்பு :

தாளம் தொடங்கிய பின்னர் பாட்டு ஆரம்பித்தல் அனாகத எடுப்பு எனப்படும்

உதாரணம்:-

நின்னருள் இயம்பலாகுமோ - பந்துவராளி - ரூபகம்


உன்னையல்லால் -சிம்ஹேந்திரமத்திமம் - ஆதி





அதீத எடுப்பு :

தாளம் தொடங்குமுன் பாட்டு ஆரம்பித்தல் அதாவது முன்னைய ஆவர்த்தனத்தின் இறுதியில் பாட்டு ஆரம்பித்தல் அதீத எடுப்பு எனப்படும்.

உதாரணம் :- சிவகாம சுந்தரி- முகாரி - ஆதி




- இந்த எடுப்பு இசை உருப்படிகளில் மிக அபூர்வமாகவே கையாளப்படுகின்றது.
- ஹிந்தஸ்தானி இசையில் சமம் , அதீதம், அனாகதம் முறையே On the beat, Before the beat, after the beat எனப்படும்

க்ரஹம் பற்றிய விளக்கம் - 1 1/2 புள்ளி

3 பிரிவுகளுக்கும் 1 1/2 புள்ளிகள் வீதம் - 4 1/2 புள்ளிகள்

மொத்தம் 1 1/2 +4 1/2 = 06 புள்ளிகள்

(ii) ஹிந்துஸ்தானி இசை :

- சர்வதேச இசை வகைகளுள் ஹிந்துஸ்தானி இசையும் ஒன்றாகும்.
- மேஜர்ஸ்கேல் இராகம் ஹிந்துஸ்தானி இசையில் பிலாவலுக்கு ஒப்பானதாகும்.
- ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் பாடகர் தம் குரலுக்கு உகந்த சுருதியை தேரந்தெடுப்பதற்கு சுதந்திரம் உண்டு.
- ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் சங்கராபரண இராகம் ஆரம்ப இராகமாகக் கற்பிக்கப்படுகிறது.
- ஹிந்துஸ்தானி இசை நிகழ்ச்சிகளில் பயன்படுத்தப்படும் வாத்தியங்களாவன ஸிதார்,ஸரோட், வயலின், ஸாரங்கி, தபேலா போன்றவை.
- ஹிந்துஸ்தானி இசையில் கச்சேரியின் போது சுருதிக்காகத் தம்புராவையும், தாளத்திற்காக தபேலாவும் மாத்திரம் வாசிக்கப்படுகின்றன.
- இன்று ஸாரங்கி தனி வாத்தியமாகவும் பக்க வாத்தியமாகவும் வாசிக்கப்படுகின்றது.
- ஹிந்துஸ்தானி இசை நிகழ்ச்சிகளைக் கேட்கும் போது அமைதி, சாந்தம் போன்ற உணர்வுகள் ஏற்படும்.
- ஹிந்துஸ்தானியில் மேள இராகம் தாட் எனவும் தாளம் தால் எனவும் குறிப்பிடப்படும்.

இசைக் கலைஞர்களின் பெயர்கள், பாடப்படும் இராகங்கள் போன்றவை குறிப்பிட்டதாக 06 விடயங்கள் காணப்பட்டால் (06 புள்ளிகள்)

(iii) மேலைத்தேய இசை :


- சர்வதேச இசை வகைகளுள் மேலைத்தேய இசையும் ஒன்றாகும்.
- மேலைத்தேய இசையில் அடிப்படை இராகம் மேஜர் ஸ்கேல் ஆகும்.
- மேலைத்தேய இசையில் ஸ்வரங்களை நோட் (Note) என்றும், ஸ்ருதியை பிச் (Pitch) என்றும் அழைப்பர்.
- மேலைத்தேய சங்கீத இசை நிகழ்ச்சிகளில் பயன்படுத்தப்படும் வாத்தியங்களாவன பியானோ, கிற்றார்,எக்கோடியன், மெலோடிக்கா, ஓர்கன், வயலின், ட்ரம்செட், சக்ஸபோன், ஒபோ, செலோ போன்றவையாகும்.
- மேலைத்தேய இசையில் பலர் ஒன்று சேர்ந்து இசைக்கும் நிகழ்ச்சிக்கு Orechestra என அழைப்பர்.
- நிகழ்ச்சியைக் கொண்டு நடாத்துபவர் Conductor மஎன அழைக்கப்படுகிறார்.
- மேலைத்தேய இசையில் மனோதர்மத்திற்கு முக்கியம் குறைவு.
- மேலைத்தைய இசைக்கருவிகளில் பிரதானமானது பியானோ இசைக்கருவியாகும்.
- மேலைத்தேய இசைமுறையில் இசைக் குறியீடுகளை ஸ்டாவ் நொடேஷன், ஸ்கிறிப்ட் நொடேஷன் எனவும் அழைப்பர்.

இவற்றுள் 06 விடயங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் (06 புள்ளிகள்)

(மொத்தப் புள்ளிகள் - 06 + 06 = 12 புள்ளிகள்)

**வினா இலக்கம் 04 இற்கான குறிக்கோள்**
வீணை வாத்தியத்தின் படத்தினை வரைந்து, பாகங்களைக் குறிப்பிட்டு இவ்வாத்தியத்தின் அமைப்பு, சிறப்பம்சங்கள், வாசிக்கும் முறை, அவற்றின் தனித்துவங்கள், வாத்தியத்தினை வாசித்து பிரபல்யமடைந்த இசைக்கலைஞர்கள் என்பவற்றை விளக்குவர்.

04. (i) வீணையின் படத்தினை வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக.




(04 புள்ளிகள்)

(ii) வீணையின் அமைப்பினை விளக்குக.

- வீணையின் தண்டியின் ஒரு பக்கத்தில் குடமும் மறுபக்கத்தில் யாழிமுகமும் அமைந்திருக்கும்.
- தண்டியானது குடப்பக்கத்தில் சற்றுப் பருத்தும், யாழி முகப்பக்கத்தில் சற்று சிறுத்தும் இருக்கும்.
- தண்டியின் இரு பக்கங்களிலும் மெழுகுச் சட்டங்கள் காணப்படும்.
- மெழுகுச் சட்டங்களின் மேலாக இரண்டு ஸ்தாயிகளைத் தழுவிய 24 மெட்டுக்கள் காணப்படும்.
- மெட்டுக்கள் வெண்கலம், வெள்ளி, எஃகு ஆகிய உலோகங்களினால் செய்யப்பட்டிருக்கும்.
- யாழிமுகத்திற்கு அருகிலிருக்கும் சுரைக்காய் ஒரு தாங்கியாகவும் ஒலியைப் பெருக்கும் சாதனமாகவும் பயன்படும்.
- வாசிக்கும் தந்திகள் நான்கும் தாளத்தந்திகள் மூன்றும் காணப்படும்.
- தந்திகள் லங்கர்களின் நுனியிலுள்ள வளையங்களில் இணைக்கப்பட்டு குதிரையின் மேலும் மெட்டுக்களின் மேலும் சென்று பிருடைகளில் பிணைக்கப்பட்டிருக்கும்.
- லங்கர்கள் வீணையின் மூலாதாரம் எனப்படும் நாகபாசத்தில் இணைக்கப்பட்டிருக்கும்.
- லங்கர்களின் மேலுள்ள சிறு உருட்டுக்கள் நுட்பமாக சுருதி சேர்ப்பதற்கு உதவும்.
- பிருடைகளைத் திருகுவதன் மூலம் சுருதியினை மாற்றிக் கொள்ள முடியும்.
- வாசிப்புத் தந்திகள் :

  ஸாரணி - ஸ

  பஞ்சமம் - ப

  மந்தரம் - ஸ

  அனுமந்தரம் - ப

- தாளத்தந்திகள் :

  பக்க ஸாரணி - ஸ

  பக்க பஞ்சமம் - ப

  ஹெச்சு ஸாரணி - ஸ்

(04 புள்ளிகள்)

(iii) வீணையின் சிறப்புக்கள் இரண்டினைத் தருக.

விடை :

- இசைக்கருவிகளில் சிறப்பான வாத்தியமாகவும் இந்தியாவின் தேசிய வாத்தியமாகவும் விளங்குகின்றது.
- வாத்தியத் திரயத்தில் முதலாவதாக விளங்குகின்றது.
- இந்திய சங்கீதத்தின் அளவுகோல் என்று சிறப்பிக்கப்படுகிறது.
- கலைமகள் கையில் உள்ளமையினால் இதன் பெருமை நன்கு புலப்படுகின்றது.

இவற்றுள் இரு சிறப்புக்கள் குறிப்பிட்டிருப்பின் (02 புள்ளிகள்)

(iv) வீணை வாசித்துப் பிரபல்யமடைந்த இசைக்கலைஞர்கள் இருவரினது பெயர்களைத் தருக.

விடை :

1. வீணை தனம்மாள்
2. காரைக்குடி சாம்பசிவம்
3. எஸ்.பாலச்சந்தர்
4. சிட்டிபாபு
5. வீணை காயத்ரி
6. கே.பி.சிவானந்தம்பிள்ளை
7. ராஜேஸ் வைத்யா

இவர்களுள் இருவர் அல்லது பொருத்தமானவர்களைக் குறிப்பிடப்பட்டிருப்பின் (02 புள்ளிகள்)

மொத்தப் புள்ளிகள் - 4+4+2+2 =12 புள்ளிகள்

| |
|---|
| **வினா இலக்கம் 05 இற்கான குறிக்கோள்**<br>சியாமா சாஸ்திரிகளின் பிறப்பு, இளமைக்காலம், இசைக்காற்றிய பணிகள், சிஷ்யர்கள், அற்புதங்கள், அவரால் இயற்றப்பட்ட உருப்படிகள் போன்ற விடயங்களை ஆராய்வர். |

05. சியாமா சாஸ்திரிகளின் வாழ்க்கை வரலாற்றினையும் அவர் இசைக்கு ஆற்றிய பணிகளையும் பின்வரும் விடயங்களின் கீழ் ஆராய்க.

(i) பிறந்த இடம்

விடை :

தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள திருவாரூர் (01 புள்ளி)

(ii) இளமைக்காலம்

விடை :

- சமஸ்கிருதத்திலும் தெலுங்கிலும் பாண்டித்தியம் பெற்றிருந்தார்.
- முதன்முதலில் தனது மாமனாரிடம் இசை பயின்றார்.
- சங்கீத சுவாமிகள் எனும் ஜதி சிரேஷ்டரிடம் சங்கீத தத்துவங்கள், தாள சாஸ்திர மர்மங்கள், கதி நடை பேதங்கள், பிரஸ்தார நுட்பங்கள் என்பவற்றைக் கற்றார்.

இம்மூன்று விடயங்களும் குறிப்பிடப்பட்டிருப்பின் (03 புள்ளிகள்)

(iii) வாழ்ந்த காலம்

விடை :

- 1762 -1827 ஆகும். (02 புள்ளிகள்)

(iv) இயற்றிய உருப்படிகள் இரண்டு

விடை :

கிருதி – 'தேவி ப்ரோவ..' – சிந்தாமணி – ஆதி
கிருதி – 'அகிலாண்டேஸ்வரி..'– கர்நாடக காபி – ஆதி
கிருதி — 'ப்ரோவவம்மா..' – மாஞ்சி – ஆதி
கிருதி – 'ஹிமாத்ரிஸ்⁶தே..'– கல்யாணி – ரூபகம்
கிருதி – 'நின்னுவினாகமரி..' – பூர்விகல்யாணி – சாபு
ஸ்வரஜதி – 'காமாட்சி..' – பைரவி – ரூபகம்

இவற்றுள் இரண்டினைக் குறிப்பிட்டிருப்பின் (02 புள்ளிகள்)

(v) உருப்படிகளின் சிறப்புக்கள் இரண்டு

விடை :

- விலோம சாபு தாளத்தில் கிருதிகளை இயற்றியதன் மூலம் சாபு தாளத்தின் சிறப்பினை எடுத்துக் காட்டினார்.
- தாளப் பிரஸ்தாரம், அதீத அனாகத எடுப்புக்கள் இவரது உருப்படிகளின் அமைப்புக்குச் சுவை கூட்டுவனவாக அமைந்தன.
- சொற்சுவை, பொருட்சுவை, இன்பச்சுவை, பாவபுஷ்டி முதலியவை நிறைந்த இவரின் உருப்படிகளின் சுவை கதலி ரசத்திற்கு ஒப்பானது.
- ஆனந்தபைரவி இராகம் இவரின் சொத்து ஆகும்.
- ஸ்வராட்சர அணி இவரது உருப்படிகளில் இடம்பெற்றுள்ளன.
- சரபநந்தன தாளத்தில் பல்லவி பாடியுள்ளார்.

இவற்றுள் இரு விடயங்கள் குறிப்பிட்டிருப்பின் (04 புள்ளிகள்)

மொத்தப் புள்ளிகள் - 1+2+3+2+4 =12 புள்ளிகள்

**வினா இலக்கம் 06 இற்கான குறிக்கோள்**
72 மேளகர்த்தா சக்கரத்தின் அமைப்பு, அதில் அடங்கியுள்ள இராகங்கள், சுரஸ்தானங்கள், சக்கரங்களின் பெயர்கள், கடபயாதித் திட்டம் போன்ற விடயங்களை உதாரணங்களுடன் எழுதுவர்.

06. (i) 72 மேளகர்த்தா அமைப்பினைச் சுருக்கமாக எழுதுக.

விடை :

- 72 மேளகர்த்தாச் சக்கரம் இரு சமபாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது.
- 1 -36 பூர்வ மேளகர்த்தாக்கள் எனவும் 37 – 72 உத்தர மேளகர்த்தாக்கள் எனவும் அழைப்பர்.
- 1 -36 மேளங்கள் சுத்த மத்திமத்தைக் கொண்டிருப்பதால் சுத்த மத்திம மேளம் எனவும் 37 – 72 மேளங்கள் பிரதி மத்திமத்தைக் கொண்டிருப்பதால் பிரதி மத்திம மேளம் எனவும் அழைக்கப்படுகிறது.
- 12 சக்கரங்கள் :
    1. இந்து – 1 – 6
    2. நேத்ர – 7 - 12
    3. அக்னி – 13 - 18
    4. வேத – 19 - 24
    5. பாண – 25 - 30
    6. ருது – 31 -36
    7. ரிஷி – 37 - 42
    8. வஸ<sup></sup> – 43 - 48
    9. பிரஹ்ம – 49 – 54
    10. திசி – 55 - 60
    11. ருத்ர – 61 – 66
    12. ஆதித்ய – 67 -72

    - 1 – 6 சக்கரங்கள் சுத்த மத்திமச் சக்கரம், 7 – 12 சக்கரங்கள் பிரதி மத்திமச் சக்கரம் ஆகும்.
    - ரிஷப, காந்தாரம் சக்கரத்திற்குச் சக்கரம் மாறுபாடடையும்.
    - தைவத, நிஷாதம் சக்கரத்திற்கு உள்ளேயே மாறுபாடடையும்.
    - சுத்த ரிஷபம் எடுத்துக் கொள்ளும் சக்கரங்கள் – இந்து, நேத்ர, அக்னி, ரிக்ஷி, வஸ/, பிரம்ம
    - சதுஸ்ருதி ரிஷபம் எடுத்துக் கொள்ளும் சக்கரங்கள் – வேத, பாண, திசி, ருத்ர
    - சட்சுருதி ரிஷபம் எடுத்துக் கொள்ளும் சக்கரங்கள் – ருது, ஆதித்ய
    - சுத்த காந்தாரம் எடுத்துக் கொள்ளும் சக்கரங்கள் – இந்து, ரிக்ஷி,
    - சாதாரண காந்தாரம் எடுத்துக் கொள்ளும் சக்கரங்கள் – நேத்ர, வஸ⁶, வேத, திசி
    - அந்தர காந்தாரம் எடுத்துக் கொள்ளும் சக்கரங்கள் – அக்னி, பாண, ருது, பிரம்ம, ருத்ர, ஆதித்ய
    - தைவதம், நிஷாதம் மாற்றமடையும் விதம் :

| தைவதம் | நிஷாதம் |
|---|---|
| 1. சுத்த தைவதம் | 1. சுத்த நிஷாதம் |
| 2. சுத்த தைவதம் | 2. கைஷிகி நிஷாதம் |
| 3. சுத்த தைவதம் | 3. காகலி நிஷாதம் |
| 4. சதுஸ்ருதி தைவதம் | 4. கைஷிகி நிஷாதம் |
| 5. சதுஸ்ருதி தைவதம் | 5. காகலி நிஷாதம் |
| 6. சட்சுருதி தைவதம் | 6. காகலி நிஷாதம் |

- சங்கேதங்கள் : பா, ஸ்ரீ, கோ, பூ, மா, ஷா
- 16 சுரப் பெயர்களும் சங்கேதங்களும் குறிப்பிட்டிருப்பின்
- விவாதி மேளங்கள் பற்றிக் குறிப்பிட்டிருப்பின்
- விவாதி தோஷமுள்ள மேளமும் விவாதி தோஷமற்ற மேளமும் குறிப்பிட்டிருப்பின்

(04 புள்ளிகள்)

(ii) 7ஆவது சக்கரத்தினைக் குறிப்பிட்டு, அச்சக்கரத்தில் இடம்பெறும் இராகங்களையும் அதன் மேள எண்களையும் முறையே தருக.

விடை : ஏழாவது சக்கரம் ரிஷி ஆகும்.

37 - ஸாலகம்

38 - ஜலார்ணவம்

39 - ஜாலவராளி

40 - நவனீதம்

41 - பவானி

42 - ரகுப்பிரியா

(05 புள்ளிகள்)

(iii) 7ஆவது சக்கரத்தில் வரும் இராகங்களின் ஸ்வரஸ்தானங்களைக் கிரமமாக எழுதுக.

| மேள எண் | இராகங்கள் | ஸட்ஜம் | ரிஷபம் | காந்தாரம் | மத்திமம் | பஞ்சமம் | தைவதம் | நிஷாதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 37 | ஸாலகம் | ஸட்ஜம் | சுத்த ரிஷபம் | சுத்த காந்தாரம் | பிரதி மத்திமம் | பஞ்சமம் | சுத்த தைவதம் | சுத்த நிஷாதம் |
| 38 | ஜலார்ணவம் | ஸட்ஜம் | சுத்த ரிஷபம் | சுத்த காந்தாரம் | பிரதி மத்திமம் | பஞ்சமம் | சுத்த தைவதம் | கைஷிகி நிஷாதம் |
| 39 | ஜாலவராளி | ஸட்ஜம் | சுத்த ரிஷபம் | சுத்த காந்தாரம் | பிரதி மத்திமம் | பஞ்சமம் | சுத்த தைவதம் | காகலி நிஷாதம் |
| 40 | நவனீதம் | ஸட்ஜம் | சுத்த ரிஷபம் | சுத்த காந்தாரம் | பிரதி மத்திமம் | பஞ்சமம் | சதுஸ்ருதி தைவதம் | கைஷிகி நிஷாதம் |
| 41 | பவானி | ஸட்ஜம் | சுத்த ரிஷபம் | சுத்த காந்தாரம் | பிரதி மத்திமம் | பஞ்சமம் | சதுஸ்ருதி தைவதம் | காகலி நிஷாதம் |
| 42 | ரகுப்பிரியா | ஸட்ஜம் | சுத்த ரிஷபம் | சுத்த காந்தாரம் | பிரதி மத்திமம் | பஞ்சமம் | சட்சுருதி தைவதம் | காகலி நிஷாதம் |

(03 புள்ளிகள்)

(மொத்தப் புள்ளிகள் - 04 + 05 + 03 = 12 புள்ளிகள்)

**வினா இலக்கம் 07 இற்கான குறிக்கோள்**

வில்லுப்பாட்டு தொடர்பான வரலாறு, அதன் ஆற்றுகை முறை, அங்கத்தவர்கள், பாடல்களின் வகைகள், பக்க வாத்தியங்கள், வில்லுப்பாட்டு நிகழ்த்துபவரின் தனித்துவப் பண்புகள் போன்ற விபரங்களை குறிப்பிடுவதோடு, தாம் இரசித்த வில்லுப்பாட்டு தொடர்பான அனுபவங்களை எழுதுவர்.

**அல்லது**

இந்தியாவில் 18ஆம் நூற்றாண்டுப் பகுதியில் நிலவிய இசை தொடர்பான வரலாற்றுப் பின்னணி, தோற்றம் பெற்ற நூல்கள், இசைக்கலைஞர்கள், அவர்கள் இசைக்காற்றிய பணிகள் தொடர்பாக ஆராய்வர்.

07. **நீர் பார்த்து இரசித்த வில்லுப்பாட்டு நிகழ்வொன்றினைப் பற்றி விரிவாக எழுதுக.**

**விடை :**

- வில்லுப்பாட்டு நிகழ்வு நடைபெற்ற இடம், காலம், நேரம் குறிப்பிட்டிருப்பின்
- வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்ற நிகழ்வு தொடர்பாகக் குறிப்பிட்டிருப்பின்
- வில்லுப்பாட்டு நிகழ்ச்சியின் கருப்பொருள் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருப்பின்
- கதை சொல்லும் பாணி, இடம்பெற்ற பாடல்கள், இசையமைப்பு பற்றிக் குறிப்பிட்டிருப்பின்
- பக்கப் பாட்டுக்காரரின் பங்களிப்புக்கள் பற்றிக் குறிப்பிட்டிருப்பின்
- பக்க வாத்தியக்காரரின் அனுசரணையான வாசிப்பு முறை பற்றிக் குறிப்பிட்டிருப்பின்
- வில்லுப்பாட்டு ஆரம்பம் முதல் முடிவு வரையான பாடல்களின் ஒழுங்கு பற்றிக் குறிப்பிட்டிருப்பின்
- ஆற்றுகையாளர், வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை நிகழ்த்திய விதம் பற்றிக் குறிப்பிட்டிருப்பின்
- வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்குப் பயன்படுத்தும் மிருதங்கம், தபேலா, சல்லாரி, கடம் (குடம்), ஹார்மோனியம், சப்லாக்கட்டை, தாளம் போன்ற இசைக் கருவிகளைக் குறிப்பிட்டிருப்பின்
- மேடையமைப்பு, ஒலி-ஒளி அமைப்புப் பற்றிக் குறிப்பிட்டிருப்பின்
- ஆற்றுகையாளரின் பொருத்தமான உடை, ஒப்பனை பற்றிக் குறிப்பிட்டிருப்பின்
- வில்லுப்பாட்டு ஆற்றுகை தொடர்பான நிறை - குறை பற்றிக் குறிப்பிட்டிருப்பின்

மொத்தப் புள்ளிகள் = 12 புள்ளிகள்

அல்லது

**இந்தியாவின் கர்நாடக இசை வரலாற்றில் 18 ஆம் நூற்றாண்டின் கலாசாரப் பின்னணி பற்றி ஆராய்க.**

**விடை :**

- கர்நாடக சங்கீத வளர்ச்சியில் ஒரு திருப்பு முனை ஏற்பட்டமை.
- அருணாசலக்கவிராயரால் இயற்றப்பட்ட இராம நாடகக் கீர்த்தனையில் விருத்தங்கள், கீர்த்தனங்கள், தருக்கள் காணப்பட்டமை.
- இதிலுள்ள கீர்த்தனைகள், பண்டைத்தமிழ்ப் பழமொழிகள் பலவற்றைக் கொண்டுள்ளமை.
- சீர்காழித் தல புராணம், அனுமார் பிள்ளைத்தமிழ், சீர்காழிக் கோவை, அசோமுகி நாடகம் என்பவை அருணாசலக் கவிராயரால் எழுதப்பட்டமை.
- திரிகூடராசப்பக் கவிராயரால் குற்றாலக் குறவஞ்சி எனும் இசை நாடகம் இயற்றப்பட்டமை.
- வெயிகீத பைடால குருமூர்த்தி சாஸ்திரிகளால் ஆயிரக்கணக்கான கீதங்களும் பிரபந்தங்களும் இயற்றப்பட்டமை.
- பச்சிமிரியம் ஆதியப்பர் தாம் சாஸ்திர மூலம் கற்ற கமக நுட்பங்களைச் சீர்படுத்தியமை.
- தானவர்ண மார்க்கதரிசி என சிறப்புப் பெற்ற இவரால் இராகம், பல்லவி பாடும் முறையில் ஓர் ஒழுங்கு முறை உண்டாக்கப்பட்டமை.
- இக்காலத்தில் தான வர்ணம் எனும் அப்பியாச கான உருப்படி தோன்றியமை.
- பச்சிமிரியம் ஆதியப்பரால் தசவித கமகங்களை வெளிப்படுத்தும் “விரிபோணி ” என்ற அட தாள வர்ணம் இயற்றப்பட்டமை.
- சங்கீத மும்மூர்த்திகள் தோன்றி ஆயிரக்கணக்கான உருப்படிகள் மூலம் இராகங்களுக்கு உயிரோட்டம் அளித்து அவற்றை இசையுலகுக்கு அளித்தமை.
- குருகுலவாச முறை இக்காலத்தில் வழக்கத்தில் வந்தமை.
- தஞ்சாவூர் ஒரு இசைப்பீடமாக அமைய மும்மூர்த்திகள் காரணமாக இருந்தமை.
- சமுதாயக் கீர்த்தனைகள், கொத்துக் கீர்த்தனைகள், தியாகராஜ பஞ்சரத்னக் கீர்த்தனைகள் இயற்றப்பட்டமை.
- தியாகராஜ சுவாமிகளால் சங்கதிகள் பாடும் முறை ஏற்படுத்தப்பட்டமை.
- மும்மூர்த்திகளால் திராட்சை ரசம், நாளிகேர ரசம், கதலி ரசம் ஆகிய ரசங்களில் உருப்படிகள் இயற்றப்பட்டமை.
- சரபநந்தன தாளத்தில் சியாமா சாஸ்திரிகளால் பல்லவி பாடப்பட்டமை.
- ஸ்வராட்சர அணி புகுத்தப்பட்டமை.
- விலோம சாபு தாளத்தில் உருப்படிகள் இயற்றப்பட்டமை.

இவற்றுள் எவையேனும் 12 விடயங்கள் குறிப்பிட்டிருப்பின் (12 புள்ளிகள்)

♬ ♬ ♬ ♬ ♬ ♬ ♬

# 10 සහ 11 ශ්‍රේණි සඳහා ග්‍රන්ථ නාමාවලිය

## (අ.පො.ස) සාමාන්‍ය පෙළ
## 11 ශ්‍රේණිය - කෙටි සටහන්

### සිංහල මාධ්‍ය

- 10-11 සිංහල ව්‍යාකරණ
- 10-11 සිංහල සාහිත්‍යය රසාස්වාදය
- බුද්ධ ධර්මය
- කතෝලික ධර්මය
- සිංහල භාෂාව හා සාහිත්‍යය
- සිංහල සාහිත්‍යය සංග්‍රහය
- English Language
- ගණිතය - 1
- ගණිතය - 2
- ජීව විද්‍යාව
- භෞතික විද්‍යාව
- රසායන විද්‍යාව
- ඉතිහාසය
- ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය
- භූගෝල විද්‍යාව
- පුරවැසි අධ්‍යාපනය
- පෙරදිග සංගීතය
- නර්තනය
- නාට්‍ය හා රංග කලාව
- චිත්‍ර කලාව
- තොරතුරු හා සන්නිවේදන තාක්‍ෂණය
- සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය
- සෞඛ්‍යය හා ශාරීරික අධ්‍යාපනය
- කෘෂි හා ආහාර තාක්ෂණය
- ගෘහ ආර්ථික විද්‍යාව

## 11 ශ්‍රේණිය - ප්‍රශ්නෝත්තර

### සිංහල මාධ්‍ය

- සිංහල භාෂාව හා සාහිත්‍යය
- බුද්ධ ධර්මය
- ඉතිහාසය
- ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය
- පුරවැසි අධ්‍යාපනය

## Grade 11 - Short Notes

### English Medium

- Buddhism
- Mathematics - 1
- Mathematics - 2
- Biology
- Physics
- Chemistry
- History
- Business & Accounting Studies
- Geography
- Civic Education
- ICT
- Health & Physical Education
- 10-11 English Literary (Poetry)
- 10-11 English Literary (Drama)
- 10-11 English Literary (Short Story)

## Grade 11 - Model Papers

### English Medium

- Civic Education

## 10 ශ්‍රේණිය - කෙටි සටහන්

### සිංහල මාධ්‍ය

- බුද්ධ ධර්මය
- කතෝලික ධර්මය
- සිංහල භාෂාව හා සාහිත්‍යය
- සිංහල සාහිත්‍යය සංග්‍රහය
- සිංහල රචනා අත්වැල
- English Language
- ගණිතය - 1
- ගණිතය - 2
- ජීව විද්‍යාව
- භෞතික විද්‍යාව
- රසායන විද්‍යාව

ඉතිහාසය
ඉතිහාසය රූප සටහන් ඇශ්‍රිත කෙටි සටහන්
ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය - 1
ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය - 2
භූගෝල විද්‍යාව
පුරවැසි අධ්‍යාපනය
පෙරදිග සංගීතය
නර්තනය
නාට්‍ය හා රංග කලාව
චිත්‍ර කලාව
තොරතුරු හා සන්නිවේදන තාක්ෂණය
සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය
සෞඛ්‍යය හා ශාරීරික අධ්‍යාපනය
කෘෂි හා ආහාර තාක්ෂණය
ගෘහ ආර්ථික විද්‍යාව
ජපන් භාෂාව

## 10 ශ්‍රේණිය - ප්‍රශ්නෝත්තර

**සිංහල මාධ්‍ය**

සිංහල භාෂාව හා සාහිත්‍යය
බුද්ධ ධර්මය
ගණිතය
විද්‍යාව
ඉතිහාසය
පුරවැසි අධ්‍යාපනය
භූගෝල විද්‍යාව
පෙරදිග සංගීතය

## පාඩමෙන් පාඩමට මාසික ඇගයීම්

**සිංහල මාධ්‍ය**

10-ශ්‍රේණිය - විද්‍යාව
11-ශ්‍රේණිය - විද්‍යාව

## Grade 10 - Short Notes

**English Medium**

Buddhism
Mathematics - 1
Mathematics - 2
Biology
Physics
Chemistry
History
Business & Accounting Studies - 1
Business & Accounting Studies - 2
Geography
Civic Education
ICT
Health & Physical Education

## Grade 10 - Model Papers

**English Medium**

Mathematics
Science
Civic Education
Geography
English Activity Book
English Work Book

## අනෙකුත් ග්‍රන්ථ

හෙළදිව කතිකාවත
- අරුණශාන්ත අමරසිංහ

හොල්මන් අවතාර සහ යකඳුරන්
- අරුණශාන්ත අමරසිංහ

සිසු-ගුරු අත්පොත නාට්‍ය හා රංග කලාව 10-11 ශ්‍රේණි සඳහා (නව විෂය නිර්දේශය) - නන්දන අල්ගේවත්ත

සියලු ම ශ්‍රේණි සඳහා කෙටි සටහන්, ප්‍රශ්න පත්‍ර කට්ටල සහ වැඩ පොත් අප සතුව තිබෙන අතර, මෙම ඕනෑම ග්‍රන්ථයක් වට්ටම් සහිත ව ඔබේ නිවසට ම ගෙන්වා ගත හැකි ය.